# இலங்கை சமூக பாதுகாப்புச் சபை

# கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் நிரந்தர பதவிகளுக்காக அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பொது முகாமையாளர் பதவி - 01

**தகைமைகள்: (பின்வரும் தகைமைகள் I அல்லது II)**

1. முகாமைத்துவம்/ வியாபார நிர்வாகம்/ வர்த்தகம்/ பொருளியல்/ சட்டம் போன்ற பாடத்துறைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

   அத்துடன்

   குறித்த துறையில் பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் (Masters) பெற்றிருத்தல்/ பதவியுடன் தொடர்புடைய பாடத்துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

   மற்றும்

   அரசாங்கம், கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் குறித்த துறையில் பதினைந்து (15) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல். (இதில் குறைந்தபட்சம் 03 வருடகாலம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலாக இருக்க வேண்டும்.)
2. பதவியுடன் தொடர்புடைய பாடத்துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

   மற்றும்

   அரசாங்கம், கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் குறித்த துறையில் பதினைந்து (15) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல். (இதில் குறைந்தபட்சம் 03 வருடகாலம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலாக இருக்க வேண்டும்.)

**மேலதிக தகைமைகள்**

1. ஆங்கில மொழியில் வேலை செய்யும் ஆற்றல்
2. கணனிப் பயன்பாடு தொடர்பான அறிவு மற்றும் அது தொடர்பான தொழில்சார் கல்வித் தகைமையைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்: (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. சபையின் சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியில் (HM 1-1) 03 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயதெல்லை:** 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு:** 2025-03-25ஆம் திகதிய 01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2027-01-01ஆம் திகதி முதல் உரித்தாகும் சம்பள அளவு HM 1-3 - ரூபா 152,500-15 ×4,100- 214,000 ஆகும்.

**ஆட்சேர்க்கப்படும் போதான சம்பள அளவு:** 133,028.00 ரூபா உரித்தாகும்.

**வசதிகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்:** அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**போக்குவரத்து வசதிகள்:** சாரதி சகிதமான வாகனம் மற்றும் மாதாந்த எரிபொருள் 145 லீட்டருக்குக் சமமான கொடுப்பனவு அல்லது வாகனக் கொடுப்பனவு மற்றும் எரிபொருள் கொடுப்பனவு உரித்தாகும்.

**தொலைபேசி வசதிகள்:** மாதாந்த அலுவலக தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி மற்றும் வீட்டு தொலைபேசிக்காக 7500.00 ரூபா தொகை உரித்தாகும

**ஏனைய கொடுப்பனவுகள்:** அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் உரித்தாகும்.

## உதவிப் பொது முகாமையாளர் (நிதி மற்றும் ஈட்டல்) பதவி - 01

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

01. கணக்கியல்/ முகாமைத்துவம்/ வர்த்தகமாணி/ வியாபார முகாமைத்துவம்/ அரச முகாமைத்துவம் போன்ற பாடத்துறையில் பெற்றுக்கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம்

    மற்றும்

    பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் இயைபுடைய விடயத்துறையில் ஒரு (01) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
02. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (ICASL) உரிமச் சான்றிதழ் அல்லது இடைநிலைப் பரீட்சையில் சித்திச் சான்றிதழ்/ (CIMA/ACCA) இல் தொழில்சார் 1ஆம் மட்டத்தில் சித்திச் சான்றிதழ் அல்லது இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா சான்றிதழ் சகிதம் குறித்த தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் கணக்கியல்/ கணக்காய்வுத் துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருடகால அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

**தகைமைகள்: (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. "கனிஷ்ட முகாமைத்துவ" சேவை வகுதியில் (JM) இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயதெல்லை:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு:** 2025-03-25ஆம் திகதிய 01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2027-01-01ஆம் திகதி முதல் உரித்தாகும் சம்பள அளவு MM 1-2 - ரூபா 91,690–10 x 2,480–15x 3,450 – ரூபா 168,240 ஆகும்.

**ஆட்சேர்க்கப்படும் போதான சம்பள அளவு:** 81,710.00 மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**தொலைபேசி வசதிகள்:** மாதாந்த அலுவலக தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி மற்றும் வீட்டு தொலைபேசிக்காக 3750.00 ரூபா தொகை உரித்தாகும்.

**ஏனைய கொடுப்பனவுகள்:** அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் உரித்தாகும்.

## அங்கத்தவர் மேம்பாட்டு அதிகாரி பதவி - 07

**ஒப்படைக்கும் கடமைகள்**

இந்தச் சபை அங்கத்தவர் ஊக்குவிப்பு அதிகாரிகளால் செயல்படுத்தப்படும் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கு அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கான உரிய திட்டங்களைத் தயாரித்தல், ஆட்சேர்ப்புப் பணிகளை மேற்கொள்ளல், கள அளவில் உரிய விழிப்புணர்வுப் பிரசாரங்களைச் செயல்படுத்துதல், சேர்த்துக்கொள்ளப்பட்ட அங்கத்தவர்கள் தங்கள் தவணைப் பணத்தை உரிய நேரத்தில் செலுத்துவதன் மூலம் தங்கள் அங்கத்துவத் தகுதியைத் தீவிரமாகப் பராமரிக்கிறார்களா என்பதைச் சரிபார்த்தல், உரிய தவணைப் பணத்தை தாமதமின்றி உரிய நேரத்தில் சபைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், மேலும் பலன்களை வழங்குவதற்கான தேவையான பூர்வாங்கச் சரிபார்ப்புகளையும் முடிவுகளையும் சமர்ப்பித்தல்.

**தகைமைகள்**

சந்தைப்படுத்தல்/ முகாமைத்துவம்/ வர்த்தகம்/ பொருளியல்/ புள்ளிவிபரவியல்/ சமூக விஞ்ஞானம்/ சமூக வேலைகள்/ குடிவிபரவியல் உள்ளடங்கலான பாடத்துறைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**வயதெல்லை:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு:** 2025-03-25ஆம் திகதிய 01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2027-01-01ஆம் திகதி முதல் உரித்தாகும் சம்பள அளவு MA -3 - ரூபா 53,940 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1,320 - 5 x 1,350 - ரூபா 94,980 ஆகும்.

ஆட்சேர்க்கப்படும் போதான சம்பள அளவு: 49,831.00 மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

## அலுவலக உதவியாளர் பதவி - 01

**தகைமைகள்**

**கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியிருத்தல்.**

**வயதெல்லை:** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

**சம்பள அளவு:** 2025-03-25ஆம் திகதிய 01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2027-01-01ஆம் திகதி முதல் உரித்தாகும் சம்பள அளவு PL-1 - ரூபா 40,500-10×450-10×490-7×540-15×590- 62,530.00 ஆகும்.

**ஆட்சேர்க்கப்படும் போதான சம்பள அளவு:** 38,488.00 மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

## சாரதி பதவி - 01

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்தி சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**தேர்ச்சி**

மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் A தர சாரதி உரிமத்தைப் பெற்றிருத்தல் மற்றும் சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் சாரதியாக 03 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்**

மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் A தர சாரதி உரிமத்தைப் பெற்றிருத்தல் மற்றும் சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் சாரதியாக 03 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

மற்றும்

ஆரம்ப அரைத் தேர்ச்சி (PL 2) அல்லது ஆரம்ப தேர்ச்சியற்ற (PL 1) சேவை வகுதியில் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**வயதெல்லை:** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

**சம்பள அளவு:** 2025-03-25ஆம் திகதிய 01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2027-01-01ஆம் திகதி முதல் உரித்தாகும் சம்பள அளவு PL-3 - ரூபா 43,280-10×490-10×540-10×590-12×630-67,040.00 ஆகும்.

**ஆட்சேர்க்கப்படும் போதான சம்பள அளவு:** 40,834.00 மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**பொது நிபந்தனைகள் (அனைத்து பதவிகளுக்குமானது)**

**அனைத்து விண்ணப்பதாரர்களும்**

- இலங்கைப் பிரஜையாகவிருக்க வேண்டும்.
- பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- சிறந்த நடத்தையுடையவராக இருக்க வேண்டும்.
- அரச மொழித் தேர்ச்சியை பூர்த்தி செய்யக்கூடியவராக இருக்க வேண்டும்.
- தகைமைகள் தொடர்பான சகல சான்றிதழ்களின் பிரதிகளை சமாதான நீதவான் ஒருவரினால் உண்மைப் பிரதியென சான்றுபடுத்தி விண்ணப்பப் படிவத்துடன் அனுப்ப வேண்டும்.
- அதிகூடிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் முன்னுரிமை வழங்கப்பட்டு நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.
- சிங்களம், தமிழ், ஆங்கிலம் எனும் மூன்று மொழிகளிலும் அல்லது சிங்களம் / தமிழ் அத்துடன் ஆங்கில மொழியில் சேவை செய்யும் ஆற்றல் மற்றும் கணனி பயன்பாடு தொடர்பான அறிவு சகிதமான விண்ணப்பதாரர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும். (சாரதி மற்றும் அலுவலக வேலை உதவியாளர் தவிர்ந்த ஏனைய பதவிகளுக்கு)
- சிங்களம் அல்லது தமிழ் சகிதம் ஆங்கில மொழியில் சமர்ப்பித்தலை (PowerPoint Presentations) வெற்றிகரமாக மற்றும் கவர்ச்சிகரமாக செய்யக்கூடிய விண்ணப்பதாரர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும். (சாரதி மற்றும் அலுவலக வேலை உதவியாளர் தவிர்ந்த ஏனைய பதவிகளுக்கு)

இப்பதவி நிரந்தரமானது. ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். மூன்று வருட தகுதிகாண் காலத்தின் பின் பதவி நிரந்தரமாக்கப்படும். எழுத்துமூல போட்டிப் பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் பதவிக்கு ஆட்சேர்க்கப்படும். மேற்கூறிய பதவிகளை நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுதல் தொடர்பான இறுதித் தீர்மானத்தை பணிப்பாளர் சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

உங்களைப் பற்றி விசாரிக்கக்கூடிய உறவினரல்லாத இருவரின் பெயர் மற்றும் முகவரிகள் சகிதமான உங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை தகைமைகள் தொடர்பான சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதிகள் சகிதம் 2026-07-23ஆம் திகதிக்கு முன் ''தலைவர், இலங்கை சமூக பாதுகாப்புச் சபை, இல. 18, ராஜகிரிய வீதி, ராஜகிரிய'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது தலைமை அலுவலகத்தின் நிர்வாகக் கிளைக்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும்.

தற்போது அரச சேவையில் அல்லது நியதிகள் சட்டசபை நிறுவனத்தில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள் நிறுவனத் தலைமையினூடாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். மேலதிக தகவல்களை www.ssb.gov.lk எனும் இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**எம். கே. பீ. திசாநாயக்க,**
**தலைவர்,**
**இலங்கை சமூக பாதுகாப்புச் சபை,**
**'சமூக பாதுகாப்பு இல்லம்'**
**இல. 18, ராஜகிரிய வீதி,**
**ராஜகிரிய.**

**2026-07-10ஆம் திகதி.**